# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## துரித கற்றல் கையேடு தரம் :- 04
## தமிழ்

### சிறுவர் பாடல்
### வழிகாண்போன்

ஒரு மரமேனும் நான் நட்டு – என்
உயிரைப் போல பேணிடுவேன்!
ஒரு வர்க் கேனும் சிறு உதவி – நான்
உள்ளன்போடு செய்திடுவேன்!

காகம் வந்து கரைந்திட்டால் - நான்
கைபிடிச் சோறு வைத்திடுவேன்!
தாகம் என்று வருவோர்க்கு – நான்
தண்ணீர் தந்து மகிழ்ந்திடவேன்!

படிப்பறிவில்லா மாந்தர்க்கு – என்
படிப்பால் நன்மை புரிந்திடுவேன்!
துடிக்கம் ஏழை துயர் துடைக்க – நான்
தூங்காதிருந்து வழிகாண்பேன்!

- முத்து –
நன்றி பிள்ளைப்பாடல்கள்

---

### பிராணிகளின் கொண்டாட்டம்

சிங்கத்தின் வீட்டில் கொண்டாட்டம்
சிறுத்தைகள் எல்லாம் பெருங் கூட்டம்

சிலந்தி கட்டும் வெள்ளை
குரங்கு கட்டும் மாலை

ஒட்டகம் கொட்டகை ஆக்கும்
சிவிங்கி சரங்கள் தூக்கும்

கரடி கொட்டும் மேளம்
குதிரை தட்டும் தாளம்

பாட்டுப் பாடும் குயில்கள்
நாட்டியம் ஆடும் மயில்கள்

பன்னீர் தெளிக்கும் யானை
சந்தனம் கொடுக்கும் பூனை

மான்கள் பாயை விரிக்கும்
முயல்கள் அழைத்துச் சிரிக்கும்

---

❖ பாடலை வாசித்து விடை எழுதுக.

ஒரு மரமேனும் நான் நட்டு – என்
உயிரைப் போல பேணிடுவேன்!
ஒரு வர்க் கேனும் சிறு உதவி – நான்
உள்ளன்போடு செய்திடுவேன்!

1. இப்பாடல்வரிகள் எதனை வலியுறுத்துகின்றது? ............................
2. எம் உயிரைப் போலப் பேணவேண்டியது எது? ..................................
3. உதவி எவ்வாறு செய்ய வேண்டும் ? ........................................

❖ பாடல்வரிகளைப் பூர்த்தி செய்க

## வழிகாண்போன்

ஒரு மரமேனும் நான் நட்டு – என்
………………………..பேணிடுவேன்!
ஒரு வர்க் கேனும் சிறு உதவி – நான்
……………………..செய்திடுவேன்!

……………..கரைந்திட்டால் - நான்
கைபிடிச் சோறு வைத்திடுவேன்!
………………வருவோர்க்கு – நான்
தண்ணீர் தந்து மகிழ்ந்திடவேன்!

படிப்பறிவில்லா மாந்தர்க்கு – என்
……………………..புரிந்திடுவேன்!
துடிக்கம் ஏழை துயர் துடைக்க – நான்
……………………..வழிகாண்பேன்!

- முத்து –

நன்றி
பிள்ளைப்பாடல்கள்

❖ பிரணிகளுக்குக் கொண்டாட்டம் என்ற பாடலில் உள்ள பிராணிகளின் பெயர்களை எழுதுக?

……………………………  ……………….  ………………..

……………………..  ……………….  ………………..

……………………..  ……………….  ……………….

……………………..  ………………  ……………….

……………………..  ……………….

❖ கொண்டாட்டத்தில் இடம் பெற்ற செயற்பாடுகள் எவை?

………………………...  ……………………..  ……………………...

………………………...  ……………………..  ……………………...

………………………...  ……………………..  ……………………...

### விகடத் துணுக்கு

"எவ்வளவு பெரிய ஆபத்து வந்தாலும் யானை, குதிரை எல்லாம் கத்தவே கத்தாது. ஏன் என்று கூறு?"
"யானை பிளிறும், குதிரை கனைக்கும்"

